# தீபாவளியுடன் பட்டமளிப்பையும் கொண்டாடிய மாணவி

எஸ். வெங்கடேஷ்வரன்

இவ்வாண்டின் தீபாவளிப் பண்டிகை குமாரி அபிராமிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்து கடந்த மாதம் 11ஆம் தேதியன்று பட்டம் பெற்றார் 25 வயது குமாரி ரா.அபிராமி.

நான்கு ஆண்டுகள் பகுதி நேரமாகப் படித்து உயிர் மருத்துவ பொறியியலில் தம் பட்டப்படிப்பை முடித்த கையோடு, அதே பல்கலைக்கழகத்தில் இப்போது முதுகலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார்.

"வேலை செய்துகொண்டே படிப்பது சுலபம் அல்ல. நேரத்தை நன்றாக வகுத்துக்கொண்டு, வேலைக்கும் படிப்புக்கும் சம அளவில் கவனம் செலுத்தவேண்டும்.

"கல்வியில் சிறக்கவேண்டும் என்ற தீவிர லட்சியம் கொண்டதால்தான் இது சாத்தியம் ஆனது. அறிவியல் துறையில் இருந்த எனது ஆர்வமும் வாழ்வில் சாதிக்க வேண்டும் என்ற வேட்கையும்தான் நான் எதிர்நோக்கிய சவால்களை எதிர்கொள்ளத் தூண்டின," என்றார் குமாரி அபிராமி.

நீ ஆன் பலதுறைத் தொழிற் கல்லூரியில் உயிரியல் மருத்துவ அறிவியல் பாடத்தில் பட்டயம் பெற்றபின் வேலை செய்யத் தொடங்கினார் அவர்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் புற்றுநோய் சார்ந்த ஆராய்ச்சியில் ஆய்வுக்கூடத் தொழில்நுட்பராகக் கடந்த இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து, அதன்பின் சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழகத்தில் (எஸ்ஐடி) தொழில்நுட்ப அதிகாரியாகக் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாகப் பணிபுரிந்தார்.

இன்றும் அவர் உயிரியல் சார்ந்த கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அவருடைய சாதனை காரணமாக அவரது குடும்பத்தினருக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டதோடு தம் மூன்று தங்கைகளுக்கும் குமாரி அபிராமி ஒரு நல்ல முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறார்.

"என்னையும் என் தங்கைகளையும் படிக்க வைக்க என் தந்தை பெரிதும் பாடுபடுகிறார். அவருக்கு இந்தச் சாதனையைச் சமர்ப்பிக்கிறேன்.

எனக்கு அடுத்து என் 20 வயது தங்கை, ரா.ஸ்ரீதுர்காவும் என் பாதையைப் பின்பற்றுகிறார். அடுத்த ஆண்டு சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்தில் நான் படித்த அதே துறையில், அவரது பட்டப்படிப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டு இருக்கிறார். அவருக்கு ஒரு சிறந்த வழி காட்டியாக இருந்து வெற்றி பாதையை அமைத்துத் தர விரும்புகிறேன்," என்று கூறினார் குமாரி அபிராமி.

பன்னிரண்டாம் முறையாக நடைபெறும் வருடாந்திர அறிவியல் சந்திப்பில் எஸ்யுஎஸ்எஸ் மற்றும் எஸ்ஐடி பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துப் பட்டக்கல்வி பிரிவில் தங்க விருதைக் கைப்பற்றினார். அத்துடன் தம் பட்டப் படிப்பின் இறுதி ஆண்டு திட்டப் பணியைக் கொண்டு 'ஃபாலிங் வால்ஸ்' (Falling Walls) என்ற போட்டியிலும் பங்கேற்றுள்ளார் குமாரி அபிராமி.

"ஒவ்வோர் ஆண்டும் தீபாவளியைக் குதூகலமாகக் கொண்டாடி வந்தாலும் பல சாவல்களைக் கடந்து வந்து இவ்வாண்டு என் பட்டக்கல்வியை முடித்துவிட்ட நிலையில் தீபாவளியைக் குடும்பத்தாருடன் கொண்டாடுவது கூடுதல் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் கொடுக்கிறது," என்று குறிப்பிட்டார் குமாரி அபிராமி.



குடும்பத்தில் மூத்த மகளாக விளங்கும் குமாரி அபிராமிக்கு (இடமிருந்து மூன்றாவது) மேலும் மூன்று தங்கைகள் உள்ளனர். அம்மா இல்லத்தரசி. தந்தை சேவைத் துறையில் தொழில்நுட்பராகப் பணிபுரிகிறார். **படம்: சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்**